**OS.No.438/2019** **P.W.1-பாஞ்சாலை** **20.07.2026**

<u>7 மற்றும் 8வது பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் படித்ததில்லை. நான் திருமணமான காலத்திலிருந்து கடந்த 60லிருந்து 70 வருடங்களாக இளையனார் குப்பத்தில் வசித்து வருகிறேன். என் சகோதரர் குடியிருக்கும் திருப்போரூர் கிராமத்திற்கும் 15 கி.மீ தூரம் இருக்கும். எனது மகன் கேசவன் முதல் பிரதிவாதியின் மகள் கௌசல்யாவை திருமணம் செய்தார். அந்த திருமணம் நடந்து 30 ஆண்டுகள் இருக்கும். என் தம்பிக்கும் எனக்கும் நல்ல உறவு முறை இருந்து வந்தது. என் தம்பி மணி வழக்கு சொத்துகள் அனைத்தும் அவரே தான் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். 17.10.2005 அன்று பி அட்டவணை சொத்தில் 5வது அயிட்ட சொத்தை 7 மற்றும் 8வது பிரதிவாதிகள் விலைக்கு வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. அவ்வாறு கிரயம் செய்து ஒரு வருடம் கழித்து எனக்கு தெரியவந்தது.

2. கிரயம் வாங்குவதற்கு முன்பே அவர்கள் எவ்வளவு கிரய தொகை கொடுக்க போகிறார்கள் என்று தெரியும் என்றால் தெரியாது. 7 மற்றும் 8வது பிரதிவாதிகள் சகோதரிகள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் திருப்போரூர் பக்கம் செல்லும் போது 7 மற்றும் 8வது பிரதிவாதிகள் வாங்கிய சொத்தை பார்த்துள்ளேன். அந்த சொத்தில் மா, தென்னை ஆகியவை பயிரிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. 7 மற்றும் 8வது பிரதிவாதிகள், 1 முதல் 6 பிரதிவாதிகளிடமிருந்து உரிய மறுபயன் கொடுத்து நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்றார்கள் என்றால் சரியல்ல, என்னுடைய சொத்தையும் சேர்த்து வாங்கிவிட்டார்கள்.

3. கிரயம் வாங்கிய பிறகு பட்டா மாற்றி கடந்த 20 வருடங்களாக உரிய வரி செலுத்தி அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நிலத்தை DTCP அனுமதி பெற்று அவற்றை வீடு கட்டும் இடமாக மாற்றியுள்ளார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. அந்த சொத்தை அதன் பாதுகாவலர் நிரந்தரமாக பாதுகாத்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி அட்டவணை 5வது அயிட்ட சொத்து 7 மற்றும் 8வது பிரதிவாதிகள் விலைக்கு வாங்கியிருப்பதால் அந்த சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை நான் எந்தகாலத்திலும் மற்ற பிரதிவாதிகளோடு சேர்ந்து கூட்டாக அனுபவித்து வந்ததில்லை என்றால் சரியல்ல.

4. மேற்படி சொத்தை பொறுத்து நான் எந்த வரியும் இது வரை செலுத்தியதில்லை. என்னுடைய தம்பியை நம்பி அவரிடம் விட்டிருந்தேன். நான் மேற்படி சொத்தில் கூட்டு அனுபவத்தில் இல்லாத காரணத்தினால் உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை கிரயம் ஏற்பட்டு 14 ஆண்டுகள் கழித்து காலதாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய தம்பி என்னுடைய பாகத்தை கொடுப்பார் என்று எதிர்பார்த்தேன். அவர் எதுவும் கொடுக்காததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். உரிய காலவரையறையில் இந்த வழக்கை தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

5. என்னுடைய தம்பியினுடைய மற்ற சொத்துக்களை பொறுத்து பாகம் கேட்பதற்கு எந்த தடையும் இல்லை, 7 மற்றும் 8வது பிரதிவாதிகள் வாங்கிய சொத்துக்களை பொறுத்து பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. 7 மற்றும் 8வது பிரதிவாதிகளுக்கு எதிராக என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல. 7 மற்றும் 8வது பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை